[1987 ஏப்ரல் 9

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினத்திலுள்ள நசுவினியாறு.

361—(* வினா எண் 8643) திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம், சேது ரோடு முகப்பில் இருந்து கடல்வரை நசுவினியாற்றை ஆழப் படுத்தி கரையைப் பலப்படுத்திட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): சேது ரோடு முகப்பிலிருந்து கடல்வரை நசுவினியாற்றை ஆழப்படுத்த 3 லட்சத்து 88 ஆயிரத்துக்கு மதிப்பீடுகள் ஒப்பளிக்கப்பட்டு புல்டோசர் மூலமாக வேலை செய்யப்பட்டது. வனப்பகுதிகளில் வேலை செய்ய இயலவில்லை. தற்போது ஒப்புதல் பெறப்பட்டு, மரங்கள் வெட்டுவது குறித்து மேற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கோடையில் வேலை செய்து முடிக்கப்படும்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள அதிராமப்பட்டினம் சேதுரோடு முகப்பில் நசுவினியாற்றில் வெள்ளக் காலத்தில் தண்ணீர் அதிகமாக வரும்போது இந்த ஆறு மேடு இட்டு இருப்பதால் கரைகள் உடைக்கப்பட்டு விடுகின்றன. அதனால் அங்குள்ள பல்வேறு கிராமங்களில் ஆண்டுதோறும் பாழடையும் நிலை ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பீட்டில் பராமரிக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதே நோக்கில் வன் இலாகாவினுடைய பகுதியில் இந்த ஆண்டு உரிய காலத்தில் அதை செயல்படுத்தி வருகிற ஆண்டுகளில் எப்படிப்பட்ட சீர் கேடுகள் ஏற்படாத அளவுக்கு அதைச் சீர் செய்து தருவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

1987 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல் வெள்ளம் வருகிற போது அந்தப் பகுதி பாதிக்கப்படுகிறது என்று அதிகாரிகள் ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அதன் அடிப்படையில் வேண்டிய துரித நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

வடஆற்காடு மாவட்டம், அணைக்கட்டு ஒன்றியம் அரசம்பட்டு அணைத்திட்டம்.

362—(* வினா எண் 8994) **திரு. த. பழனி மற்றும் திரு. வி. இரா. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மேல் அரசம்பட்டு அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மேல் அரசம்பட்டு அணைத்திட்டம் கட்டுகிற திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட திட்டம் அரசிடம் இல்லை என்று சொன்னாலும் கூட அங்கே இடை இடையே ஆற்றின் குறுக்கே செக் டாம்ஸ் கட்டுகிற திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்று நீர்ப் படுகை பற்றாக்குறை படுகையாக இருப்பதால் அங்கே அணைக் கட்டுகள் கட்டுவது இல்லை என்று அரசு முடிவு செய்து இருக் கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய